# 14-07-2024 செய்தி

## துணைநிலை ஆளுநருக்கு கூடுதல் அதிகாரம் – ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்பு சட்டத்தில் திருத்தம்

- புதிதாக சேர்க்கப்பட்ட 2ஏ துணை விதிமுறையின் கீழ், துணைநிலை ஆளுநரின் விருப்ப உரிமையைச் செயல்படுத்த காவல்துறை, பொது ஒழுங்கு, அகில இந்திய சேவை மற்றும் ஊழல் தடுப்பு பணியகம் தொடர்பாக நிதித் துறையின் முன் ஒப்புதல் தேவைப்படும் எந்தவொரு திட்டமும் தலைமைச் செயலாளர் மூலம் துணைநிலை ஆளுநரின் முன்வைக்க வேண்டும். இல்லையென்றால் அவற்றை செயல்படுத்த முடியாது.
- புதிதாக சேர்க்கப்பட்ட 42ஏ சட்டப்பிரிவின் கீழ், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உதவும் தலைமை வழக்கறிஞர் மற்றும் இதர சட்ட அதிகாரிகள் நியமனத்துக்கான முன்மொழிகளுக்கு துணை நிலை ஆளுநர் ஒப்புதல் பெற, அவற்றை தலைமைச் செயலாளர் மற்றும் முதல்வர் மூலமாக சட்டம், நீதி, சட்டப்பேரவை விவகாரத்துறை தாக்கல் செய்ய வேண்டும்.
- புதிய விதி 42பி பிரிவின்கீழ், வழக்கு தொடர்வதற்கான அனுமதி அல்லது மறுப்பு, மேல் முறையீடு தொடர்பான திட்டங்களை, சட்டம், நீதி மற்றும் சட்டப்பேரவை விவகாரத்துறை தலைமைச் செயலர் மூலமாக துணை நிலை ஆளுநரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.
- மேலும் சிறைகள், குற்ற வழக்கு இயக்குநரகம், தடய அறிவியல் ஆய்வகம் தொடர்பான விஷயங்களும் தலைமை செயலர் மூலமாக துணைநிலை ஆளுநர் முன் உள்துறை தாக்கல் செய்யும் வகையில் ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்பு சட்டத்தின் 43ஆவது பிரிவில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.
- அரசுத் துறை செயலாளர்கள், அகில இந்திய பணி அதிகாரிகளின் நியமனம் மற்றும் பணியிடமாற்றம் தொடர்பான முன்மொழிவுகளும் தலைமை செயலாளர் மூலமாக துணைநிலை ஆளுநர் முன்வைக்க வேண்டும்.
- இந்திய அரசிதழில் வெளியிடப்பட்ட முதன்மை விதிமுறைகளின்கீழ் இந்த திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.
- நிர்வாக நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும், துணைநிலை ஆளுநரின் விருப்ப உரிமையை உறுதி செய்வதற்காகவும் இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.
- காஷ்மீரில் புதிய அரசு ஆட்சி அமைந்தாலும், அங்கு நிர்வாகம், சட்டம் ஒழுங்கு, சட்ட விவகாரம் சுமூகமாக நடைபெற துணை நிலை ஆளுநருக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளன.

## பெண்களுக்கு மாதவிடாய் விடுப்பு தேவையில்லையா?

- பெண்களுக்கு மாதவிடாய் விடுப்பு அளிப்பதைக் கட்டாயமாக்கினால் தொழிலாளர் சந்தையில் இருந்து பெண்கள் விலக்கி வைக்கப்பட அது காரணமாக அமையலாம்.
- பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க நிறுவனங்கள் முன்வராத சூழலும் ஏற்படலாம்.
- பெண்களின் நன்மைக்கு என நாம் முன்னெடுக்கும் திட்டம் அவர்களுக்கு எதிரானதாக மாறிவிடக் கூடாது என நீதிபதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

**சலுகை அல்ல**

- பெண்களின் அடிப்படை உரிமையான மகப்பேறு விடுப்பையே அவர்களுக்கான சலுகை போலப் பெரும்பாலானோர் கருதுகின்ற சூழலில் உச்சநீதிமன்றத்தின் இந்தக் கருத்து பெண்ணுரிமைச் செயற்பாட்டாளர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.
- மாதவிடாய், மகப்பேறு போன்றவை பெண்களின் தகுதிக் குறைபாடுகள் அல்ல, அவை பெண்களின் உடலில் நிகழும் உடலியல் மாற்றங்கள், மனிதக் குல மறு உற்பத்தியோடு தொடர்புடையவை.
- இந்தச் செயல்பாடு எந்தத் தடங்கலும் இன்றி நிகழும்போதுதான் அடுத்த தலைமுறை ஆரோக்கியத்துடன் இருக்கும்.
- இந்த அடிப்படை உண்மையைப் புறந்தள்ளி விட்டு மாதவிடாய் விடுப்பைப் பெண்களுக்கான தனிப்பட்ட சலுகையாகக் கருதுவது தவறு.
- சமூகத்தில் பெண்களுக்கு எதிராக நிலவும் பிற்போக்குத் தனங்களையும் சமூக அவலங்களையும் களைந்து சமூகத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்திச் செல்வது தான் சட்டத்துறை, நீதித்துறை போன்ற அமைப்புகளின் நோக்கமாக இருக்க வேண்டும்.
- அதை விடுத்து, சமூகத்தில் மலிந்து கிடக்கிற பெண்களுக்கு எதிரான பிற்போக்குக் கருத்துகளுக்குத் தூபம் போடுவதுபோல் நீதிமன்றங்களும் நடந்து கொள்வது நியாயமல்ல என்பது பெண்ணுரிமைச் செயற்பாட்டாளர்களின் வாதம்.

**முன்னோடிகள்**

- சிக்கிம் உயர் நீதிமன்றம் கடந்த மே மாதம் தங்கள் பெண் ஊழியர்கள் மாதத்தில் 2 – 3 நாள்கள் மாதவிடாய் விடப்பு எடுத்துக் கொள்ளலாம் என அறிவித்தது.
- பிஹாரில் 1992ஆம ஆண்டிலிருந்தே மாதவிடாய் விடுப்பு அமலில் இருக்கிறது.
- வணிக நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் பெண்களுக்கு ஊதியத்துடன் கூடிய மாதவிடாய் விடுப்பு அளிக்க வகை செய்யும் சட்டத்திருத்த மசோதாவை 2023 ஆகஸ்டு மாதத்தில் மகாராஷ்டிரா அரசு அறிமுகப் படுத்தியது.
- கேரளத்தின் உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவிகள் மாதவிடாய் விடுப்பு எடுத்துக் கொள்ளலாம் என 2023இல் கேரள உயர்கல்வி அமைச்சகம் அறிவித்தது.

**பெண்களையும் உள்ளடக்கிய கொள்கை**

- பெண்கள் பணிபுரியும் இடங்களிலும் கல்விக் கூடங்களிலும் மாதவிடாய் நாள்களைச் சுகாதாரத்துடன் எதிர்கொள்வதற்கான கட்டமைப்புகளோ அடிப்படை வசதிகளோ இருப்பதில்லை.
- தண்ணீர், தூய்மையான கழிப்பறை, ஓய்வு எடுக்கும் அறை போன்றவை இல்லாததால் மாதவிடாய் நாள்களில் சுகாதாரம் பேணுவது பெரும்பாலான பெண்களுக்கு இயலாத காரியமாகிவிடுகிறது.
- பெண்களின் மாதவிடாய் விடுப்பையும் உள்ளடக்கிய நெறிமுறைகளை நிறுவனங்கள் உருவாக்க வேண்டும் எனப்பணி வழங்குவோருக்கு நிபந்தனை விதிக்க வேண்டும்.